# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு ரணிலைத் தள்ள வேண்டும் டில்லி

## கோரிக்கை விடுத்தார் சம்பந்தன்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாமலுள்ள அனைத்து விடயங்களையும் செயற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும், என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கோரியுள்ளார்.

இந்த விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்துக்குக் கொண்டுசெல்வதாகத் தூதுவர் பதிலளித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் செயலர் ஆகியோர் நேற்று நேரில் சென்று சந்தித்தனர். இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்றது.

சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தகவல் வழங்கியபோது, இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையொட்டிய பேச்சுக்கள் எல்லாம் அவருக்குத் தெரியும்.

நாட்டின் தலைவராகத் தெரிவாகிய பின்னர் முதல் தடவையாக அவர் இந்தியாவுக்குச் செல்கின்றார். இதன்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச்



சந்திக்கின்றார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் செயற்படுத்தப்படாத பகுதிகளைச் செயற்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் அழுத்தம் கொடுக்க வேண்டும். குறிப்பாக அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வலியுறுத்த வேண்டும் என்று சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயத்தை உடனடியாக இந்தியப் பிரதமர்

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 28 வியாழக்கிழமை 13.07.2023 கதிர் 26

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# சமஷ்டி ஒருபோதும் சாத்தியமாகாது! ஆளும் தரப்பு உறுதிபடக் கூறுகின்றது



தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரும் சமஷ்டித் தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது. அரசு அதனை அனுமதிக்காது. கூட்டாட்சி என்ற சமஷ்டி எனப்படுவது நாட்டைத் துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது, என்று ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்க் கட்சிகள் கடிதம் அனுப்புவது போன்றவை குறித்து, அரசின் நிலைப்பாடு தொடர்பாக அவரைத்

2 ➤

# நட்ட ஈட்டை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திட்டவட்டம்!




காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு ஒருபோதும் மரணச் சான்றிதழையோ நட்ட ஈட்டையோ பெற்றுக்கொள்ள தாங்கள் தயாரில்லை, என இன்று காலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போது மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

2 ➤

# 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தரம் ஒன்று சேர்க்கை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

அரச பாடசாலைகளில் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர் பான அறிவுறுத்தல்கள் இன்று வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மாதிரி விண்ணப்பப் படிவம் www.moe.gov.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் தங்கள் பிள்ளைகளை அரச பாடசாலைகளில் தரம் ஒன்றில் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர்கள், குறித்த மாதிரிப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட

2 ➤

# சபாநாயகர் தலைமையில் நாளை கூடுகின்றது அரசமைப்புப் பேரவை

அரசமைப்புப் பேரவையின் விசேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9.30 மணிக்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தில் ஆணைக்குழு உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது, என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வை சர்வதேச நியமங்களோடு மேற்கொள்ளத் தீர்மானம்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வை சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் வைத்தியர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட கோவையின் அடிப்படையிலும் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இன்று கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, அழைக்கப்பட்ட நிறுவனப் பிரதிநிதிகளும் வைத்தியர் வாசுதேவ மற்றும் பிரணவன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், அரசியல்வாதிகள் மற்றும் துறைசார் நிறுவனங்களைச் சார்ந்தோரும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டிருந்தார்கள்.

அதன்போது, புதைகுழி அகழ்வு எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என நடத்தப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையிலேயே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வைத்தியர்களால் தயாரிக்கப்பட்ட கோவை ஒன்று காணப்படுவதாகவும், அதற்கு அமைவாக அகழ்வை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரம், எவ்வாறு குறித்த மனிதப் புதைகுழி அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என நீதிமன்றத்தாலும் பல கட்டளைகள், அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள என்பதும் குறிப்பிடத்தக்கது..

துறைசார் நிறுவனங்களினதும், தொல்பொருள்

2 ➤

# யாழ் - கொழும்பு புகையிரத சேவை மீண்டும்! பரீட்சார்த்த ஓட்டத்தில் இணைந்த அமைச்சர்



கடந்த 6 மாத காலமாக வடமாகாணத்திற்கான புகையிரதசேவை, புனரமைப்புப் பணி காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், புகையிரதப் பாதையின் முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அதனையடுத்து நேற்றைதினம் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை போக்குவரத்து வர்த்தக அமச்சர் பந்துல குணவரதன உள்ளடங்கிய குழுவினர், பரீட்சார்த்த சேவையில் அனுராதபுரத்தில் இருந்து கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

அங்கு வரவேற்பு நிகழ்வு நடைபெற்று பின்னர் நினைவு மரக்கன்றும் நாட்டப்பட்டது.

2 ➤

# இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## அமிர்தலிங்கத்தின் 34ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுட்டிப்பு



தமிழர்களின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கை நாடாளுமன்றத்தின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் 34 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று காலை வலி மேற்கு பிரதேசசபைக்கு முன்பாக உள்ள அமரரது உருவச் சிலையடியில் இடம்பெற்றது.

இதன்போது அமரரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## டிஜிட்டல் சேவை வரி தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

சர்வதேச நாணய நிதியம் டிஜிட்டல் சேவை வரி தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையின்படி, டிஜிட்டல் சேவை வரியை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எவ்வித திட்டமும் இல்லை, என குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதைய திட்டத்தில் இலங்கை அதிகாரிகளுடன் டிஜிட்டல் சேவை வரிக்கான எவ்விதமாக திட்டத்தையும் விவாதிக்கவில்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் தெளிவுபடுத்தியுள்ளது.

அத்துடன், சர்வதேச கூட்டு வரி விதிப்புக்கான ஓஈசிடி- ஜி20 உள்ளடங்கிய கட்டமைப்பு ஒப்பந்தத்தில் இலங்கை கையொப்பமிட வேண்டுமா, இல்லையா? என்பது குறித்து எந்தப் பரிந்துரையையும் வழங்கவில்லை எனவும் அது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## இலங்கையில், முச்சக்கர வண்டிகளில் அலங்காரம் - கட்டணத்துடன் அனுமதி

இலங்கையில், முச்சக்கர வண்டிகளில் மேலதிக அலங்காரங்களை மேற்கொள்ள முன்புபோல அனுமதியளிக்கப்படும், என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவ்வாறான அலங்காரங்களுக்கு கட்டணம் அறவிடப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அலங்காரங்களை 30 வகைகளின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதாகவும், மேலதிக தகவல்களை இணையத்தளத்திலோ, முச்சக்கரவண்டி ஒதுக்கீட்டுக் கிளையிலோ அல்லது 0113484520 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டோ பெற்றுக்கொள்ள முடியும் எனவும் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

### அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நரேந்திர மோடிக்குத் தெரியப்படுத்துவதாக தூதுவர் கோபால் பாக்லே உறுதியளித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் முடிவடைந்த பின்னர் என்ன நடந்தது என்பதை மீண்டும் சந்தித்து விளக்கமளிப்பதாகவும் தூதுவர் பாக்லே, சம்பந்தனிடம் தெரிவித்தார், - என்று குறிப்பிட்டார்.

### சமஷ்டி ஒருபோதும் சாத்தியமாகாது ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் நிகழும். இலங்கை தொடர்பாக இந்தியத் தரப்புக்குப் பல விடயங்கள் தெரிவிக்கப்படும்.

குறிப்பாக, இந்தியா தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றது. இதனால், தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களுக்கு ஜனாதிபதி அதிகம் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை இந்தியத் தரப்புக்குத் தெளிவுபடுத்துவார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு முட்டிமோதிக் கொண்டு கடிதம் அனுப்புவது பயனற்றது. அரசியல் இலாபம் கருதியே தமிழ்க் கட்சிகள் இவ்வாறு நடந்துகொள்கின்றன.

13 ஆவது திருத்தச் சட்ட நடைமுறை உடனடியாகச் சாத்தியமற்றது. நாடாளுமன்றத்தின் மூலமே இது அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சமஷ்டித் தீர்வைக் கோருகின்றன. இது ஒருபோதும் சாத்தியமற்றது. அரசு இதற்கு அனுமதி வழங்காது. கூட்டாட்சி எனப்படும் சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது.

இருக்கின்ற அரசமைப்பை மறுசீரமைத்து அல்லது புதிய அரசமைப்பு மூலம் நாட்டு மக்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்துக்குள் வழங்குவார், என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

### நட்ட ஈட்டை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரிய வேண்டுமெனவும், தாங்கள் பணத்திற்காக இத்தனை வருடங்கள் வீதியில் நின்று போராடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலக அதிகாரிகள் (ஓ.எம்.பி) உரையாடி, மரணச் சான்றிதழ் மற்றும் நட்டஈட்டை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.எனினும் அவர்களின் பேச்சுக்கள் தம்மிடம் செல்லுபடியாகாத காரணத்தி னால் அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அம்மாக்களையும் அழைத்து பேச்சு நடத் தினர் என்றும், அதுவும் ஏற்றுக்கொள் ளப்படவில்லையென்பதால், தற்போது அரச திணைக்களங்களை அழைத்துப் பேசுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓ.எம்.பி அலுவலக அதிகாரிகள் சகல விதத்திலும் தங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயன்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ் - கொழும்பு புகையிரத சேவை மீண்டும்! ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனையடுத்து, யாழ்பாணத்தைப் புகையிரதம் சென்றடைந்து.

நாளை மறுதினம் 15 ஆம் திகதி தொடக்கம் வழமைபோன்று புகையிரத சேவை இடம்பெறும் என்று புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தரம் ஒன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பதிவுத் தபாலில், ஓகஸ்ட் 18, 2023 க்கு முன், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. .

சகல தகைமைகளும் 2023 ஜூன் 30 ஆம் திகதிக்கு செல்லுபடியாகக்கூடிய வகையில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திணைக்களத்தினதும் அறிக்கைகளுக்காக இந்த வழக்கு விசாரணை அடுத்த வியாழக்கிழமைக்கு திகதியிடப்பட்டுள்ளது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தமிழர் தாயகம் தனிநாடாவதற்கு முனைப்புக் காட்டுங்கள் - தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன்

ஈழத்தில் எல்லாமே முடிந்துவிட்டது என எதிரிகள் கருதுவதாகவும், ஆனால் எல்லாமே புதிய திசையில் இனிமேல்தான் ஆரம்பமாகவுள்ளது எனவும் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தில் தற்போது எங்கெங்கும் மனிதப் புதைக் குழிகள் காணப்படுகின்றன. இனியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்குமா? தமிழீழத்தில் 2008 -2009 ஆம் ஆண்டில் லட்சக்கணக்கான தமிழர்களைச் சிங்களப் படை கொன்று குவித்தது.

குறிப்பாக, சிங்களப்படையின் குண்டு வீச்சிலிருந்து உயிர்தப்பிப்பதற்கு, பதுங்கு குழிகளுக்குள் ஒன்றன் மேல் ஒன்றாகப் பலநாள் படுத்திருந்த சிறுவர்கள் பட்டினியால் துடிதுடித்து உயிரிழந்தார்கள். உயிர் பிழைக்க வெட்டப்பட்ட பதுங்கு குழிகள் அவர்களின் மரணக் குழிகளாக மாறின. அடுக்கப்பட்டது போல், கிடந்த சிறுவர்களின் உடல்களை அப்படியே மண் போட்டு மூடினார்கள்.

சிறுவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் இப்படித்தான் பதுங்கு குழிகளுக்குள் படுத்து மரணத்தைத் தழுவினர்.

வெற்றிவாகை சூடிக்கொண்டதாக ராஜபக்ச அறிவித்த அந்தக் கடைசி இருநாட்களில் உயிர்காப்பதற்காக அங்குமிங்கும் ஓடிய மக்களை எறிகணைகளாலும் எந்திரத் துப்பாக்கிகளாலும் இலக்கு எதுவுமின்றி கைபோன போக்கிலும், கண்போன போக்கிலும் சுட்டுப் பல்லாயிரக்கணக்கானோரைப் பிணமாக்கினர்.

உலகெங்கும் வாழும் தமிழர்கள், தமிழீழ மக்களுக்கு எதிரான இனப்படுகொலைப் போர் குறித்தும், அதன் விளைவுகள் குறித்தும், உலக அளவில் ஏற்புடைய சர்வதேச நீதிபதிகளின் தலைமையில் புலனாய்வும் விசாரணையும் நடத்த ஐ.நா முன் வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

ஆனாலும் இதுவரை ஐ.நாவும் முன் வரவில்லை. வழக்கம் போல் இந்தியாவும் கவலை கொள்ளவில்லை. ஏனென்றால், செத்தவர்கள் ஈழத்தமிழர்கள். காணாமல் போனவர்கள் ஈழத்தமிழர்கள்.

இந்த நிலையில், முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி குழாய் நீர் பொருத்தும் பணிகளுக்காக குழியொன்று தோண்டப்பட்டபோது, பெண்களின் ஆடைகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட 'மனிதப் புதைக்குழிகள்' தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போதும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய்ப் பகுதி என்பது, 1984ம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலம் வரை முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

இறுதிப் போரின்போது, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இராணுவத்திடம் சரணடைந்ததாகவும், அவ்வாறு சரணடைந்தவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் அச்சமயத்தில் குற்றச்சாட்டு எழுந்தது. இந்தக் குற்றச்சாட்டுக்களை சிங்கள இராணுவம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது.

இச்சூழலில், முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில், மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது, சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இரத்த வெறியை அம்பலப்படுத்தியுள்ளது.

எனவே, இனியாவது தாமதிக்காமல், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நாவும், உலக நாடுகளும் முன் வர வேண்டும். உலக நாடுகளை திரட்ட ஒன்றிய அரசுக்கு, தமிழ்நாடு அரசு போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது.

இது ஒருபுறம் இருக்க, அறிவாற்றல், போராற்றல் அர்ப்பணிப்பு, விடுதலை வேட்கை ஆகியவற்றின் உருவமாகத் திகழும், உலகத் தமிழர்கள், ஈழம் தனி நாடாவதற்கான புரட்சியை முன்னிலும் பல மடங்கு வேகமாக முன்னெடுக்க வேண்டிய நேரமிது.

ஆயுதக் குழுப்போராட்டம் என்பது மக்களை ஈர்க்காது, ஈழம் தனி நாடாவதற்கான கோரிக்கையை எழுப்பும், இலட்சிய இளைஞர்கள் ஒன்று திரள வேண்டும்.

எல்லாமே முடிந்துவிட்டது என்று நம் எதிரிகள் கருதுகிறார்கள். எல்லாமே புதிய திசையில் இனிமேல் தான் தொடங்குகிறது என்று அவர்களுக்கு நாம் பறைசாற்ற வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டுகிறேன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

## ஆலய விசேடங்கள்

(படங்கள். வி.ரி.சகாதேவராஜா)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்றம் நேற்று புதன்கிழமை சிறப்பாக ஆலயத்தின் பிரதம குரு சச்சிதானந்தம் தலைமையில் பூசை வழிபாடுகளோடு பக்த அடியார்கள் குடைசூழ சிறப்பாக இடம் பெற்றது.



தம்பிலுவில் கலைமகள் வித்தியாலய ஆலையடிப் பிள்ளையார் ஆலய வருஷாபிசேகம் (சங்காபிசேகம்) நேற்று புதன்கிழமை நடைபெற்றது.



# உலகளவில் 122 மில்லியன் மக்கள் பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்

## ஐ.நா. அமைப்புகளின் ஆய்வு முடிவு



கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் 122 மில்லியன் மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வுவொன்று தெரிவிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து நிறுவனங்களால் தொடங்கப்பட்ட ஓர் ஆய்வில், 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 783 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்குப் பின் இந்த நிலை அதிகரித்துள்ளதாக அந்த ஆய்வு கூறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு, விவசாய மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியம், ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம், உலக சுகாதார நிறுவனம் மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவை இந்த நிலைமை இப்படியே தொடர்ந்தால், 2030 க்குள் பசியை முடிவுக்கு கொண்டுவரமுடியாது எனவும், நிலையான வளர்ச்சியின் இலக்கினை அடையமுடியாது எனவும் எச்சரித்துள்ளன.

# பிரேசில் மதுபான விடுதியில் துப்பாக்கிச் சூடு - 4 பேர் பலி




பிரேசிலின் சாவ் பாலோவில் உள்ள பார்க் பாரைசோ நகரத்தின் நட்சத்திர மதுபானவிடுதி ஒன்றில், நள-ளிரவில் மோட்டார் சைக்கிளில் சென்ற மர்மக் கும்பல் ஒன்று சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது.

இந்தத் திடீர்த் தாக்குதலில் விடுதிக்குள் இருந்த 4 பேர் இறந்துள்ளனர். பலர் படுகாயமடைந்தனர். இறந்தவர்களின் உடல்களை மீட்ட பொலிசார், படுகாயமடைந்தவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிமத்துள்ளனர்.

சாவ் பாலோ நகரில் பயங்கரவாதச் செயல்களில் செயல்படும் இருவேறு கும்பல்களுக்கு இடையே உள்ள முன்விரோதம் காரணமாக இந்தச் சம்பவம் நடந்ததாக பொலிசார் தரப்பில் கூறப்பட்டது.

# வீட்டில் குளிர்சாதனப் பெட்டி வெடித்து தீ விபத்து பாகிஸ்தானில் ஒரே குடும்பத்தவர் 10 பேர் பலி

பாகிஸ்தானின் வடகிழக்கு மாகாணமான பஞ்சாப்பின் தலைநகராக லாகூரில் மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியான நூர் மெகல்லாவில் உள்ள வீட்டில் அதிகாலை 2 மணியளவில் பயங்கரச் சத்ததுடன் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயணைப்புப் படையினருடன் பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து, போராடி தீயை அணைத்துள்ளனர். தீயினால் கட்டிடம் முழுவதும் சேதமானதோடு, கட்டிடத்தின் ஒரு பகுதி உருதெரியாமல் சிதைந்து விழுந்திருந்தது.

மீட்பு பணியை மேற்கொள்ள தீயணைப்பு வீரர்கள் சிதிலமடைந்த வீட்டிற்குள் நுழைந்தபோது, உடல் பாகங்கள் கருகிய நிலையில் பலர் இறந்து கிடந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஏதாவது சதித்திட்டத் தாக்குதல் அரங்கேறியதா? என்ற கோணத்தில் விசாரணை செய்தபோது திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

வீட்டில் திடீர் மின்கசிவு ஏற்பட்டு அதனால், வீட்டில் இருந்த குளிர்சாதனப் பெட்டியின் கொம்ப்ரசர் வெடித்துச் சிதறியுள்ளது. இதில் வீடு தீப்பிடித்து கரும்புகை வெளியாக, அதனைச் சுவாசித்ததால் அந்த வீட்டிலிருந்த குடும்ப உறுப்பினர்கள் மூச்சுத்திணறல் ஏற்பட்டு சிரமப்பட்டுள்ளனர்.

கணநேரத்தில் முழுவதுமாக வீடு தீப்பிடித்து எரிந்ததில் உள்ளே இருந்த 7 மாதக் குழந்தை, 5 சிறுவர்கள் உள்பட பத்துப் பேரும் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர். கட்டிடத்தில் இருந்து படுகாயங்களுடன் குதித்து வெளியேறிய ஒருவர் மட்டும் உயிர் பிழைத்துள்ளார். அவருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் இரங்கல் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் பாகிஸ்தான் முழுவதுமே சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.



# ஆபிரிக்காவில் கட்டுப்பாட்டை இழந்து விமானம் விபத்து - பயணிகள் தப்பினர்

ஆபிரிக்காவின் தலைநகர் மொகாதிஷுவில் உள்ள ஏடன் அடே விமான நிலையத்தில் ஹல்லா ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான சிறிய பயணிகள் விமானம் ஒன்று தரையிறங்க முற்பட்டபோது விபத்துக்குள்ளாகியுள்ளது.

விமானத்தின் தரையிறங்கும் கருவி பழுதடைந்ததால் குறித்த விபத்து இடம்பெற்றிருப்பதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விமானி முயற்சித்தபோதும், அது தோல்வியில் முடிந்ததால், கட்டுப்பாட்டை இழந்த விமானம் ஓடுதளத்தின் பக்கவாட்டுச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் விமானியின் இருக்கைப் பகுதி இரண்டாக உடைந்து சேதத்திற்கு உள்ளானதோடு, விமானிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.


விபத்துக்குள்ளான விமானத்தில் 30 பயணிகளும் 4 ஊழியர்களும் பயணித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. பயணிகளில் இருவர் சிறிய காயங்கள் உள்ளாகியுள்ளதாகவும், ஏனையோர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# மேல் உள்ளாடைக்குள் 5 பாம்புகள் கடத்த முயன்று அகப்பட்ட பெண்

சீனாவிற்கும் அதன் நிர்வாகப் பகுதியான ஹொங்காங்கிற்கும் இடையிலான எல்லையிலுள்ள குவாங்டாங் மாகாணத்தின் புக்சியன் துறைமுகத்திற்கு ஹொங்காங்கிற்குச் செல்ல வந்த பெண்ணைப் பரிசோதனை செய்த அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

அந்தப் பெண்ணை சந்தேகத்தின் பேரில் சுங்க அதிகாரிகள் சோதனையிட்டபோது, அவரது மேல் உள்ளாடையில் மார்பகங்களுக்கு இடையே உயிருள்ள 5 பாம்புக் குட்டிகளை வெவ்வேறு துணிப் பைகளில் கட்டி, மறைத்து வைத்து அந்தப் பெண் கடத்திச் செல்ல முயன்றமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து அந்தப் பெண்ணிடம் இருந்து பாம்புகள் அகற்றப்பட்டு, அந்தப் பெண் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.







# சந்திரயான்-3 விண்கலத்தை சுமந்து செல்லும் ரொக்கெட்டின் 'கவுண்ட்டவுன்' தொடங்கியது!

"சந்திரயான்-3" விண்கலத்தை சுமந்து செல்லும் "எல்.வி.எம்.3 எம்-4" எனும் ரொக்கெட்டின் அனைத்து பரிசோதனைகளும் சோதனை ஓட்டமும் நிறைவடைந்த நிலையில் ரொகெட்டுக்கான இறுதிக் கட்டப்பணியான 25.5 மணி நேர கவுண்ட்டவுன் தற்போது தொடங்கியுள்ளது.

விண்கலத்தை ஏந்திச்செல்லும் ரொக்கெட்டில் திட, திரவ எரிபொருட்கள் நிரப்பப்படவுள்ளன. முழுமையாக கவுண்ட்டவுனை முடித்துக்கொண்டு, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள இரண்டாவது ஏவுதளத்தில் இருந்து, நாளை பகல் 2 மணி 35 நிமிடம் 17 ஆவது செக்கனில் ரொக்கெட் விண்ணில் பாயவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலவுக்கு அனுப்பப்படும் இந்தியாவின் மூன்றாவது விண்கலமான "சந்திரயான்-3", விண்வெளி ஆய்வில் இந்தியாவை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# சாய்ந்தமருதிலும் ஆபத்தான நிலையிலுள்ள ஓர் ஒடுக்கமான பாலம் - அச்சத்தில் மக்கள்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பழைய வைத்தியசாலை வீதியிலுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுவதால் அந்தப் பாலத்தில் பயணிப்போர் அச்சத்துடனே பயணித்து வருகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலை, உபதபாலகம், பாடசாலை, பள்ளிவாசல்கள் போன்றவற்றுக்கும் தொழில் நிமித்தமான பயணங்களையும் மேற்கொள்வோர், இந்தப் பாலத்தின் வழியே பயணிக்கின்றனர். எனவே, அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியாக விஸ்தரிப்பு செய்யப்பட வேண்டும் என்பது சாய்ந்தமருது மக்களின் விருப்பமாகும்.

இருப்பினும், இந்தப் பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இந்த பிரச்சினைக்கு தீர்வை தருவதாக தேர்தல் காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் அவை எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை, என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில், தமக்கான உச்சகட்டப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முன்வர வேண்டும், என சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, இந்தப் பாலம் 5 கோடி ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டு முதற்கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## டெங்குத் தொற்றால் 33 பேர் உயிரிழப்பு




இலங்கையில் இவ்வருடம் இதுவரை டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது, என்றும், 52 ஆயிரத்து 21 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 25 ஆயிரத்து 944 இற்கும் அதிகளவானோர் டெங்கு நோயுடன் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இன்று 13 ஆம் திகதி முதல் 61 வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்குத் தடுப்பு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தனுஷ்கவை நேரில் சந்தித்த ஹரின்!

அவுஸ்திரேலியாவில் பெண்ணொருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவை இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நேரில் சந்தித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை, “உங்களைக் காண்பதில் மகிழ்ச்சி சகோதரரே” என்ற வாசகத்துடன் தனது சமூக வலைத்தளத்தில் ஹரின் பெர்னாண்டோ பதிவேற்றியுள்ளார்.






## வெட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு

காலி - அம்பலாங்கொடை பிரதேசத்தில் இன்று காலை வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய எஸ்.பி. லசந்த என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 10 மணிக்குப் பின்னர் வீட்டிலிருந்து காணாமல்போன குறித்த இளைஞர், இன்று காலை 6 மணியளவில் வீட்டுக்கு 200 மீற்றர் தொலைவில் வெற்றுக்காணியொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதுக்குடியிருப்பு - கைவேலி பகுதியில் உள்ள தற்காலிக குடியிருப்பாளர்கள் மீது தாக்குதல்

முல்லைத்தீவு, ஜுலை 13

முல்லைத்தீவு மாவட்டம் - புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கைவேலி பகுதியில் அரச காணியில் தற்காலிகமாகத் குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்த குடும்பங்கள் மீது வனவளத் திணைக்கள ஊழியர்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மண்ணெண்ணையினையும், கத்தியினையும் வனவளத் திணைக்களத்தினர் எடுத்துச் சென்றதாகவும் அதனைப் பறித்து பாதிக்கப்பட்ட நபர்களில் ஒருவர் தற்கொலை முயற்சியை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுமார் ஒன்பது குடும்பங்கள் அரச காணிகளை கையகப்படுத்தியுள்ளதாக வனவளத் திணைக்களத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை, இன்றுவரை புதுக்குடியிருப்பு மேற்கு கைவேலியில் காணி இல்லாதவர்களை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் கண்டுகொள்ளவில்லை எனவும், குறித்த பிரச்சினையைத் தீர்க்கும் முழுப்பொறுப்பும் பிரதேச செயலகத்திற்கே உண்டு, எனவும் அப்பிரதேச மக்கள் பதிலளித்துள்ளனர்.

அத்துடன், எதுவித முன்னறிவிப்பும் இன்றி வனவளத் திணைக்களத்தினர் இவ்வாறு அடாவடியாக நடந்து கொண்டமை தொடர்பாகவும் பலரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின் கொண்டாட்டம்
Tourism Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEzone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்